பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 06 2025 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதில் இந்தியாவும் - பராகுவே-யும் ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- உணவு பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் அரசு செயலாற்றி வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

- பிரான்ஸ் சென்றுள்ள மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், பாரிசில் இன்று அந்நாட்டின் முன்னணி தொழில் அதிபர்களை சந்தித்து பேச்சு நடத்தினார்.

- ரஷ்யா – யுக்ரைன் இடையே இரண்டாவது சுற்று அமைதி பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் இன்று தொடங்கியது.

- தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் Kiran வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதில் இந்தியாவும் - பராகுவே-யும் ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பராகுவே அதிபர் திரு Santiago Pena Palacios புதுதில்லியில் இன்று பிரதமரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது டிஜிட்டல் தொழில்நுட்பம், வேளாண்மை, பாதுகாப்பு, ரயில்வே, விண்வெளி உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயலாற்ற இருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

தென் அமெரிக்காவில் இந்தியாவுடன் நெருக்கமான வர்த்தக உறவை பேணும் நாடாக பராகுவே திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது பசுமை ஹைட்ரஜன், உயிரி எரிபொருள், மரபுசாரா எரிசக்தி உள்ளிட்டவற்றில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

சைபர் குற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள இரு நாடுகளும் உறுதிபாட்டினை வெளிப்படுத்தின.

முன்னதாக, பராகுவே அதிபர், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசியபோது, இருநாடுகளும் இணைந்து செயலாற்றுவதற்கான அமைப்பை உருவாக்குவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இன்று காலை தில்லி ராஜ்காட் சென்ற பராகுவே அதிபர் திரு Palacios, மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும் குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரையும் சந்தித்து, பராகுவே அதிபர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>>

தெலங்கானா மாநிலம் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தெலங்கானா மாநில மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சியில் அளப்பரிய பங்களிப்பினை அம்மாநிலம் தந்து வருவதாக பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, தெலங்கானா தினத்தையொட்டி அம்மாநிலத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆளுநர் திரு Jishnu Dev Varma முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி, மற்றும் பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

உணவு பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் அரசு செயலாற்றி வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

பீகாரின் 'Motihari ' நகரில் இன்று நடைபெற்ற வேளாண் வளர்ச்சித் திட்ட இயக்க பிரச்சார நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

இந்த பிரச்சார இயக்கம் ஐந்தாவது நாளாக தொடர்வதாக தெரிவித்த அமைச்சர், விவசாயிகளுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்கள் அவர்களை சென்றடைய செய்வதே இப்பிரச்சாரத்தின் நோக்கம் என்று கூறினார்.

வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்களின் உதவியோடு பல்வேறு ஆய்வு முடிவுகள் விவசாயிகளின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

போலி பூச்சிக்கொல்லி மருந்துகளால் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இந்த வேளாண் வளர்ச்சித் திட்ட இயக்கத்திற்கான பிரச்சாரம் தற்போது தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இப்பிரச்சாரம் பெரும் விழிப்புணர்வை தந்துவருவதாக இதில் பங்கேற்ற விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(Sound Byte - விவசாயிகள் - 38 Sec.)*

<<<<<<>>>>>

மூன்று நாள் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், பாரிசில் இன்று அந்நாட்டின் முன்னணி தொழில் அதிபர்களை சந்தித்து பேச்சு நடத்தினார்.

மின்சார வாகனம், மரபு சாரா எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக, இப்பேச்சு அமைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் நாளை திரு பியூஷ் கோயல் பங்கேற்கிறார்.

<<<<<<>>>>>

நாட்டின் நிலக்கரி உற்பத்தி கடந்த மாதம் சீரான வளர்ச்சியை கண்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய சுரங்கத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கடந்த மே மாதம் நிலக்கரி உற்பத்தி 83 புள்ளி ஒன்பது ஆறு மெட்ரிக் டன் ஆக

இருந்ததாகவும் தற்போது 86 புள்ளி இரண்டு நான்கு மெட்ரிக் டன் ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தனியார் சுரங்கங்களின் நிலக்கரி உற்பத்தி கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 3 புள்ளி ஒன்று மெட்ரிக் டன் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளது.

<<<<<<>>>>>

வளரும் நாடுகளுக்கு இணையாக தூய்மையான சுற்றுப்புறத்தை பெற குப்பைகளை தரம் பிரித்து, அதற்குரிய இடத்தில் போடுவது இன்றியமையாதது என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமது சமூக வலைதள பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், விரைவில் தொடங்கப்படும் தூய்மை மிஷன் திட்டத்தில், அனைத்துத்துறைகள் உடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்று மக்களை கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையே இரண்டாவது சுற்று அமைதி பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் இன்று தொடங்கியது.

ரஷ்யா மீது யுக்ரைன் பெரிய அளவில் ட்ரோன் தாக்குதல் நடத்திய நிலையில், இந்த பேச்சு வார்த்தை நடைபெறுகிறது.

இதில், ரஷ்யாவை சேர்ந்த விளாடிமீர் Medinsky, Mikhail Galuzin, யுக்ரைனை சேர்ந்த 'Rustem Umerov ' உள்ளிட்ட இருநாட்டு பிரதிநிதிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

போலந்து நாட்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், சட்டம் மற்றும் நீதிக்கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர் திரு 'Karol Nawrocki ' வெற்றிபெற்றுள்ளார்.

அதிபர் தேர்தலில் 50 புள்ளி எட்டு ஒன்பது சதவீத வாக்குகளை அவர் பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட ஆளும் குடிமை கூட்டணி வேட்பாளர் திரு 'Rafal Trzaskowski ' 49 புள்ளி ஒன்று ஒன்று சதவீத வாக்குகள் பெற்றார்.

<<<<<<>>>>>

நாட்டின் வடகிழக்குப்பகுதியில் உள்ள பெரும்பாலான இடங்களில் அடுத்த ஏழு நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்றும், இன்றும், நாளையும் ஒரு சில இடங்களில் கனமுதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் மற்றும் தில்லியில் இன்றும், நாளையும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா, மாஹே மற்றும் கடலோர கர்நாடகாவின் பெரும்பாலான இடங்களில் இன்று முதல் நான்காம் தேதிவரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சிக்கிம் மாநிலத்தின் 'Lachen ' பகுதியில் உள்ள ராணுவ முகாம் பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மோசமான வானிலைக்கு இடையே நான்கு பேர் உயிரோடு மீட்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மூன்று பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போன ஆறு பேரை தேடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, அருணாச்சலப்பிரதேசத்தில் பலத்த மழை காரணமாக, பல பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள 'Lohit ' மாவட்டத்தில் பல பகுதிகள் நீரால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் Kiran வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் 80 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் 8 தங்கம் உட்பட 24 பதக்ககங்களை வென்ற இந்திய அணியினருக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

---------

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று, இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் Changwon-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் 'Rudransh Khandelwal தங்கப்பதக்கத்தையும், Manish Narwal வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 10 மீட்டர் பிரிவில் Sumedha Pathak தங்கப்பதக்கத்தையும், Shrishti Arora வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

-------------------

உலகக்கோப்பை பாரா Grand Prix தடகள சாம்பியன் போட்டி பாரிசில் இன்று தொடங்குகிறது.

-----------

23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை Soft Ball போட்டி பாங்காக்கில் இன்று தொடங்கியது.

-----------

வளரும் நாடுகளுக்கு இடையேயான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வரும் வெள்ளிக்கிழமை இலங்கையில் தொடங்குவதாக இருந்த இப்போட்டி, அந்நாட்டில் நிலவும் மோசமான வானிலையை கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>